செ.வெ.எண்.135/2017 நாள்: 03-04-2018

**கள்ளச்சாராய தொழிலில் ஈட்டுபட்டு, மனம் திருந்தி, வாழ்ந்து வரும் 25 நபர்களுக்கு மறுவாழ்வு நிதியின்கீழ் ரூ.7.50 லட்சம் மதிப்பிலான கறவை பசுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், கடலூர் கிராமத்தில் கள்ளச்சாராய தொழிலில் ஈட்டுபட்டு வந்து, தற்போது மனம் திருந்தி, வாழ்ந்து வரும் 25 நபர்களுக்கு வாழ்வாதாரத்திற்காக மறுவாழ்வு நிதியின்கீழ் தலா ரூ.30 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.7.50 லட்சம் மதிப்பிலான கறவை பசுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் செய்தியாளர்களிடம் பேசியதாவது, தமிழக அரசு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மூலமாக கள்ளச்சாராயம் அருந்துவதை ஒழிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பேரணிகள், விழிப்புணர்பு பேனர்கள், துண்டு பிரசுரங்கள் பள்ளி மாணவ-மாணவிகளை மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி கடலூர் கிராமத்தில் கள்ளச்சாராய தொழிலில் ஈட்டுபட்டு வந்து, தற்போது மனம் திருந்தி, வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் விதமாக மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பாக மறுவாழ்வு நிதியின்கீழ் கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது. கள்ளச்சாராய தொழிலில் ஈடுபட்டு வந்து, தொடர்ந்து ஐந்தாண்டுகள் கள்ளச்சாராய தொழிலில் ஈடுபடாமல் இருந்து, கள்ளச்சாராயம் தொடர்பான குற்ற வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பாடாமல் இருப்பவர்கள் தான் இந்த மறுவாழ்வு நிதியுதவிக்கு தகுதியானவர்கள் ஆவார்கள். அக்கறைவை மாடுகள் கொடுக்கப்பட்டுள்ளதால் அக்குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் கல்விச் செலவு, இதர குடும்ப செலவுகளுக்கு பக்கபலமாக இருக்கும். மறுபடி கள்ளச்சார தொழிலில் ஈடுபடாமல் இருக்க ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் (கலால்) திரு.எஸ்.நடராஜன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.பி.குருமூர்த்தி, உதவி இயக்குநர் மரு.கே.அறிவழகன், கோட்ட கலால் அலுவலர் திரு.எஸ்.எம்.ஓம்பிரகாஷ், செய்யூர் வட்டாட்சியர் திருமதி.ஆர்.லட்சுமி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்